# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,270—1961 ජනවාරි 12 වැනි බ්‍රහස්පතින්දා—12.1.1961

12,270 ம் இலக்கம்—1961 ம் ஆண்டு சனவரி மாதம் 12 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. சீ. 301

உப உணவுப் பொருட்கள் (ஈர வெங்காயம்)

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ந் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை, அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இலங்கை முழுவதினதும் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஜேம்ஸ் கென்றி லனெரோல் ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) இதனோடிருக்கும் அட்டவணையின் 2, 3, 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை இறக்குமதியாளர் ஒருவர் விற்கும் ஆகக் கூடிய மொத்த விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாகக் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாது எனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன் ;

(2) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈர வெங்காயத்தில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈரவெங்காயத்தை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப் படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈர வெங்காயத்தை ஒரு மொத்த் அந்தருக்குக் குறைந்த எத் தொகையாவது பாதிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(3) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈர வெங்காயத்தை வேறெரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈர வெங்காயத்தை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஈர வெங்காயத்தில் சிறு தொகையையும் இக்கட்டளையால் ஈர வெங்காயத்துக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி ஈர வெங்காயத்தையும் ஆகக் கூடிய விலையையும் வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால், ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈர வெங்காயத்தை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈர வெங்காயத்தை சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னுருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற வெங்காயத்தின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த தொகை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ;

(7) குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஈரவெங்காயத்தை விற்குமிடத்து அட்டவணையின் 2, 3, 4 ம் பத்திகளிற் குறிப்பிட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் ஈர வெங்காயத்தை அதைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது அதை வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு தை மாதம் 12 ந் திகதியன்று காலை 11 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

ஜே. எச். லனெரோல்,
இலங்கை முழுவதினதும் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

**அட்டவணை**

| பத்தி 1<br>விபரமும் எவ்விடத்திலிருந்து வருவது என்பதும் | | பத்தி 2<br>இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | | பத்தி 4<br>நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| ஈர வெங்காயம் | .. | 24 0 | .. | 25 0 | .. | 0 28 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கபபட்ட விலைகளல்ல ; இவை **ஆகக் கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

1—499.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது